ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2361/24 - 2023 දෙසැම්බර් මස 06 වැනි බදාදා - 2023.12.06

2361/ 24 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KDS/KGK/4/2(1)/2020/5/13.
உமது இல.: 4-3/16/2020/UD/237.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவில் தெய்யன்னேவெல (261) கிராம அலுவலர் பிரிவில் (4 ஆம் பிரிவின் பஹிரவகந்த, கண்டி மாநகர சபை எல்லைக்குள்) அமைந்த, நில அளவையாளர் நாயகத்தின் சார்பாக கண்டி மாவட்ட சிரேட்ட நில அளவை அதிகாரியினால் 2023.06.27 ஆந் திகதியிடப்பட்டு அளந்து தயாரிக்கப்பட்டுள்ள C.M. 320434 இல் 01 ஆம் வலயத்தில் இலக்கம் 1 ஆம் படிவத்தில் காணித்துண்டின் இலக்கம் 01 மற்றும் விஸ்தீரணம் சுமார் 0.0058 ஹெக்டயார் முழு அளவிலான கீழ்க்காணும் எல்லைக்குள் அமைந்துள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

01. **துண்டு இல. 1**
காணியின் பெயர்: புகையிரத பாதை ஒதுக்கு நிலம் வரி இலக்கம் 252/14, பேராதெனிய வீதி; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0058 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித்துண்டுகளை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை,
2023, திசெம்பர் 05.

EOG 12 - 0059

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KDS/HAR/4/2/1/52.
சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/12/2018/WS/316.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2317/76 ஆம் இலக்க, 2023.02.02 ஆம் திகதியின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளுக்கு உரிமை கோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறுகின்ற சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2023.05.24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் காரியாலயத்தில் என்னை சந்திக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம் 2024.02.07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு என திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறியத் தருகின்றேன்.

மொஹான் தர்மதாச,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ.
குருநாகல் வீதி,
நுகவெல.
2023, நவெம்பர் 29.

EOG 12 - 0061

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KDS/PDB/4/3/2/23.
சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/18/2020/WS/49.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் அடிப்படையின் இலக்கம் 2352/34 உம் 2023.10.06 ஆந் திகதியில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட உரிமை கோரல் பரிசீலனை மற்றும் ஆவணங்கள் கையளிக்கப்பட வேண்டிய திகதி 2023.11.14 அன்று நேரம் மு.ப. 10.00 க்கு நடைபெறும் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், தற்போது இப் பரிசீலனை மற்றும் ஆவணங்கள் கையளிக்கப்படல் 2023.12.28 ஆந் திகதி மு.ப. 10.00 க்கு நடைபெற உள்ளது என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

டப். எம். டி. டி. கே. வீரகோன்,
பிரதேச செயலாளர்,
பாத்ததும்பரை.

பிரதேச செயலகம்,
பாத்ததும்பரை.
2023, திசெம்பர் 04.

EOG 12 - 0062/1

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KDS/PDB/4/3/2/21.
சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/12/2018/WS/377.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் அடிப்படையின் இலக்கம் 2352/34 உம் 2023.10.06 ஆந் திகதியில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட உரிமை கோறல் பரிசீலனை மற்றும் ஆவணங்கள் கையளிக்கப்பட வேண்டிய திகதி 2023.11.16 நேரம் மு.ப. 10.00 க்கு நடைபெறும் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், தற்போது இப்பரிசீலனை மற்றும் ஆவணங்கள் கையளிக்கப்படல் 2023.12.28 ஆந் திகதி மு.ப. 11.30 க்கு நடைபெற உள்ளது என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

டப். எம். டி. டி. கே. வீரகோன்,
பிரதேச செயலாளர்,
பாத்ததும்பரை.

பிரதேச செயலகம்,
பாத்ததும்பரை.
2023, திசெம்பர் 04.
EOG 12 - 0062/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.